செ.வெ.எண்: 11

# அரசு செய்திக் குறிப்பு.

## 7-1-2009

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆளுநர் மாளிகையில் இன்றிரவு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை சந்தித்து தமிழக அரசின் சார்பில் பல கோரிக்கைகளை வைத்ததோடு, இறுதியாக இலங்கைப் பிரச்சினை குறித்து எடுத்துக் கூறி, மத்திய அரசு ஏற்கனவே ஒப்புக் கொண்டவாறு, மத்திய வெளி உறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் எப்போது இலங்கைக்குச் செல்கிறார் என்பதைப் பற்றியும், இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்தும் எடுத்துக் கூறினார். முதலமைச்சரின் உணர்வினைப் புரிந்து கொள்வதாகவும், எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி வைப்பதாகவும் பிரதமர் மன்மோகன் சிங் தமிழக முதல்வரிடம் உறுதி கூறினார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9